முருகப்பெருமான் துணை

**மகான் மூர்க்க நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

14.11.2023, செவ்வாய்கிழமை

1. தானபலம் கொண்ட நல்
தருமனே ஆறுமுக அரங்கா
ஞானகுருவே உன் பெருமை கூறி
ஞாலமதில் அறிவுரை ஆசி
2. ஆசிதனை சோபகிருது துலை திங்கள்
அறிவிப்பேன் எழுநான்குதிகதி குசன்வாரம்
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 28 ம் நாள், 14.11.2023, செவ்வாய்கிழமை)
ஆசிதனை மூர்க்க நாயனாரும் அருளுவேன்
அகிலம் பாதுகாப்பும் நன்மையும் பெற
3. நன்மைபெற ஞானமாக அருளி
நல்ல தரும வழிகாட்டும் ஞானி
உண்மைபட அரங்கன் பலம்
உலகோர் அறிந்து வந்து
4. வந்துமே பிரணவக் குடிலை
வலம்வந்து அரங்கமகானை
எந்தவித ஐயமுமின்றி சரணாகதிபட
ஏற்று வணங்கி சேவித்து
5. சேவித்து மகாமந்திர தீட்சை
செப்பிட ஏற்று உலகமக்கள்
சேவித்து செயல்பாடு காண
சித்திமிகு வெற்றிகள் பல
6. வெற்றிகள்பல அரங்கன் வடிவில்
வேலவனார் தர மக்களுக்கு
ஆற்றல் பலம் தேகம் மனவகை
அளவிலா சக்தியாக மாறி

7. மாறியே சன்மார்க்க வழி
மாறா பற்றும் பிடிப்புமாகி
தெரியவரும் சுத்த சைவநெறிபட
தெய்வபலமாக யாவர்க்கும் அருளி

8. அருளி அரங்கமகான் வழி
ஆறுமுகனார் மக்களை அனுகி
வரங்கள் பலவாற் தந்து
வந்த பிறவிநோக்கம் உணர

9. உணரவகை செய்து தேறி
உலகையே மாற்றும் வரம்
ஞானமாக அரங்கன் வடிவில்
ஞானபண்டிதனும் தந்து மாற்றம்

10. மாற்றம் உலகம் அடைய
மகத்தான தொண்டர்படையை
ஆற்றல்பட நிறுவி இனிதே
ஆளுமை ஞான வலிமை கொண்ட

11. கொண்ட வண்ணம் அற்புதம்
குருவரங்கன் மூலம் நடக்கும்
உண்டாகிட ஒன்றிணைந்து உலகோர்
ஓங்கார குடில் நோக்கி வாரீர்

அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–